


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 29.10.2018

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- மத்திய அணுசக்தி மற்றும் விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜித்தேந்திர சிங் புது டெல்லியில் 10வது அணுசக்தி மாநாட்டை துவக்கி வைத்தார். இதற்கான கருத்துரு – **“அணுசக்தி சுத்தமான மற்றும் அடிப்படையான ஆற்றல்” Nuclear Power - Towards a clean & Base Load Energy** என்பதாகும்
    - இது இந்திய ஆற்றல் மன்றத்தால் (**IEF – Indian Energy Forum**) ஏற்பாடு செய்யப்பட்டது.

- **அரியானா** மாநில அரசு, நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் மூலம் கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவ சேவைகளை அளிக்க **‘பசு சஞ்சீவனி சேவா’** என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

- 2018ம் ஆண்டின் உலகளாவிய விவசாயத் தலைமைக்கான மாநாடு புது டெல்லியில் துவங்கியது.**(2018 – Global Agriculture Leadership Summit)**
    - இந்த இரண்டு நாள் மாநாட்டின் கருத்துரு: **சந்தையுடன் விவசாயிகளை இணைத்தல் (Connecting Farmers to Market)**

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது புது டெல்லியில் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் கூட்டுச் செயல்பாட்டினை ஊக்குவிக்கும் திட்டத்திற்கான**(SPARC – Scheme For Promotion of Academic and Research Collaboration)** வலைப் பக்கத்தை(Portal) தொடங்கியுள்ளது.
    - இந்த வலைப்பக்கமானது www.Sparc.iitkgp.ac.in என்ற முகவரியில் உள்ளது.
    - தகுந்த சூழலை இந்திய நிறுவனங்கள் மற்றும் உலகில் உள்ள சிறந்த நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே கல்வி மற்றும் ஆராய்ச்சியில் கூட்டுச் செயல்பாட்டினை ஏற்படுத்துவதன் மூலம் மேம்படுத்துவதாகும்.

- பஞ்சாப் மாநில அரசானது புற்றுநோய் மற்றும் மனித டி.என்.ஏ வை பாதிப்பிற்குள்ளாக்கும் களைக் கொல்லியான **க்ளைபோசாட்டின்(GLYPHOSATE)** விற்பனைக்கு தடை



We Shine Academy™

விதித்துள்ளது.

- ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு இந்த களைக்கொல்லியின் விற்பனையை தடைசெய்யும் நான்காவது மாநிலம் பஞ்சாப் ஆகும்.

## உலக நிகழ்வுகள்

- அமெரிக்கா – ஜப்பான் கூட்டுத் தயாரிப்பிலான இலக்கை இடைமறித்து துல்லியமாக தாக்கும் ஏவுகணையான **எஸ் எம் - 3 பிளாக் 2A(sm-3 Block IIA)** என்ற இடைமறி ஏவுகணை சோதனையை அமெரிக்க இராணுவம் ஹவாய் தீவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

- இந்தியாவின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரும், யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவிற்கானத் தூதுவருமான சச்சின் டெண்டுல்கர், பூடானின் தலைநகரான திம்புவில் தெற்காசியப் பிராந்தியத்திற்கான நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் **(WASH Innovation water, sanitation and Hygiene)** புதுமைத் திட்டத்திற்கான வெற்றியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.
  - இந்த நிகழ்ச்சியானது வங்கதேசத்தைச் சார்ந்த சர்வதேச நிறுவனமான **BRAC** என்ற அமைப்புடன், யுனிசெப்பும் இணைந்து நடத்தப்பட்டது.

## விருதுகள்

- வேளாண் விஞ்ஞானி **M.S. சுவாமிநாதன்,** புது டெல்லியில் இந்திய உணவு மற்றும் விவசாயக் குழுவினால் **(Indian Council of Food and Agriculture - ICFA)** ஏற்படுத்தப்பட்ட முதலாவது உலக வேளாண் பரிசினை வென்றுள்ளார் **(First World Agriculture Prize – 2018 – M.S. Swami Nathan)**
  - இவ்விருதானது சுவாமிநாதன் பருவநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான உலகளாவிய பேச்சுவார்த்தை என்று பெயரிடப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

# நியமனங்கள்

- மியான்மர் ஒன்றியக் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக **சௌரப் குமார்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இவர் ஈரானின் இந்தியத் தூதராக உள்ளார். இவர் **விக்ரம் மிசிரி** என்பவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™